# இரட்சிப்பு ஜூலை 2026 யுனிகோடு




இரட்சிப்பு ஜூலை 2026 யுனிகோடு

## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் 7வது மாதத்திற்குள் நம்மை வழிநடத்திய நம் மன்னாதி மன்னர் இயேசுவின் பாதம், பணிந்து தொழுவோம். இம்மாதம் 3ம் தேதி அப்போஸ்தலனாகிய பரி. தோமாவின் திருநாள் (FEAST DAY OF APOSTLE ST.THOMAS) 22ம் தேதி தூய.மேரி மகதலேனாவின் திருநாள் (FEAST DAY OF ST.MARY OF MAGDALENE), 25ம் தேதி அப்போஸ்தலனாகிய பரி. யாக்கோபுவின் திருநாள் (FEAST DAY OF APOSTLE ST.JAMES), 29ம் தேதி புனிதர்களும் இயேசுவின் நட்புகளுமாகிய தூய.மார்த்தா, தூய.மரியா, தூய.லாசரு ஆகியோரின் நினைவு நாள் (MEMORIAL DAY OF SAINTS MARTHA, MARIA AND LAZARUS) ஆகிய திருநாட்களை ஆசரிக்கிறோம்; ஜெபத்துடன் ஆசரித்து, ஆசீர்வாதம் பெறுவோம்.

2026-27 கல்வியாண்டில் நம் பிள்ளைகள் கிருபைவரங்கள் மற்றும் ஞானவரங்களை பெற்றுக்கொள்ள அவர்களுக்கு ஜெபத்துடன் உதவிசெய்வோம்.

ஜெப-ஜன்னல்-PWPM, வேதாகம-போட்டிகள்-RBCS, அனைவரும்-ஊழியத்தில்-AIMS ஆகிய திட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியம், புத்தக வெளியீட்டு ஊழியம், வலைதள ஊழியம் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியம், 'நல்ல-விதைகள்' கைப்பிரதி ஊழியம், NMS மிஷனரி ஊழியம், திருச்சபை ஊழியம் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள், காணிக்கைகள் அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பவும். தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI மற்றும் QR CODE ஆகியவை இப்பத்திரிக்கையின் 18வது பக்கத்திலும், நமது வலைதளத்திலும் உள்ளன. கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# இரட்சிப்பு இணைத் திருமறை

## (தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு)

வேத-வரிகள்-185 ஜூலை 2026 சங்கீதம்-111:10

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்திற்குத் துவக்கம்; அவைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அப்படிக்கொத்தவன் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

**திருவிவிலியம் (பொது-1995)**

ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம்; அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர் நல்லறிவுடையோர்; அவரது புகழ் என்றென்றும் நிலைத்துள்ளது.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

தேவனுக்கு பயப்படுவதும் அவரை மதிப்பதுமே ஞானத்தின் தொடக்கம். தேவனுக்கு கீழ்ப்படிகிற ஜனங்கள் மிகுந்த ஞானமுள்ளவர்கள். என்றென்றும் தேவனுக்கு துதிகள் பாடப்படும்.

## ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - ஜூலை 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1)அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், இஸ்ரேல்-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் நிறுத்தப்பட... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... உலகம் முழுதும் எரிபொருள் விநியோகம் சீரடைய...

2)இந்திய மக்களுக்கு எதிரான மதவாத, பிரிவினைவாத சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மை மக்களுக்குக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக நெறிமுறைகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து நடக்க... இந்தியாவில் எரிபொருள் விநியோகம் சீரடைய...

3)தமிழ்நாட்டு மக்கள் இன-மத-மொழி பேதமின்றி ஒற்றுமை வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள், வியாபாரம் செழிக்க... மத-வாத, பிரிவினை-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட... தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையடைய... புதிய அரசு மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைய...

4)திருமதி.சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5)திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி.ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6)திருமதி.சாரா பிரவீன் அவர்களின் பேறுகாலம் மற்றும் பாதுகாப்பான பிரசவத்துக்காக...

7)திருமதி.சார்டியஸ் தாவீது அவர்களுக்கு சுக-பிரசவத்தில் கர்த்தர் தந்த அருமையான பெண் குழந்தைக்காக... தாய்-சேய் சுக-பெல-ஜீவனுக்காக...

8)பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை கல்வி பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக.... ஜெ..ப்ரி S.ஆரோன், ஜே..பியா S.அன்னா, ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், ஷாலோம் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

9)பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை, உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக.... பிரியங்கா, சிவா, கிளாட்சன், பார்வதி, பிரேம், ஜாஸ்மின், சிப்ரா, ஷி..பியா, ஷெரின் டேவிட், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...


10)சகோ.சவேரியம்மாள், திருமதி.ஈவ்லின் USA, திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.லீலா டேவிட், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

11)திருமதி.ராஜேஷ்வரி, திருமதி.ஜலீன் செல்லத்துரை, Dr.ஷீபா, திரு.ஜெபனேசர், திருமதி.ஜரீன் வாக்கர், திருமதி.ஞானம் ஜெபராஜ், திருமதி.வசந்தா அன்பன், திருமதி.சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

12)நமது ஊழிய ஆதரவாளர்களான திரு.டேவிட் மனோகரன், திருமதி.எப்சிபா ஜாண், திருமதி.ராஜ பிரமீளா, திருமதி.தீபா மெர்ஸி கிறிஸ்டோபர், திருமதி.வனஜா ஹெர்பர்ட், திருமதி.ஜரீன் வாக்கர், திரு.J.R.டேவிட், திருமதி.ராணி சாமுவேல்ராஜ், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.S.J.P.ராஜா, திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.ஜெனெட் ஜெயசீலி ஆகியோரின் குடும்பங்களுக்காக...

==========================================================

தேவசெய்தி......



# இரட்சிப்பின் மகிழ்ச்சி

பூமியின் எல்லைகளெல்லாம் இரட்சிப்பைக் கண்டது.
பூமியின் குடிகளே, எல்லாரும் ஆனந்தமாய்
ஆர்ப்பரியுங்கள் கர்த்தரை நோக்கி முழக்கமிட்டு
கெம்பீரமாய் பாடுங்கள்.

சங்.98:3பி

## THE JOY OF SALVATION

Rev.S.J.D. Dharmaraja, Mission Director, Ratchippu Ministries,
Saligramam, Chennai-93, South India

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். மீண்டுமாக கடவுளின் வார்த்தையை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். சங்கீதம் 98, ஒரு வெற்றிப் பாடலாகவும் தேவனுடைய வெற்றியைக் கொண்டாட சர்வ சிருஷ்டிக்கும் விடப்படும் ஓர் அழைப்பாகவும் விளங்குகிறது. கடவுளின் மாறாத அன்பும் நீதியான நியாயத்தீர்ப்புகளும் உற்சாகமான துதிக்கு அடிப்படை என்பதை அது மீட்கப்பட்டவர் களுக்கு நினைவூட்டுகிறது. எனவே, இரட்சிப்பின் மகிழ்ச்சி என்ற செம்பொருளை இந்த சங்கீதத்தில் அடங்கியுள்ள வேத-வசனங்களின் துணைகொண்டு சற்று நேரம் தியானிப்போம்.

**1. கடவுளின் அற்புத செயல்களும் இரட்சிப்பும்: (வச.1 - 3)**

சங்கீதக்காரர் ஒரு தெளிவான கட்டளையுடன் தொடங்குகிறார்: "கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்; அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது."

கடவுளுடைய கிருபையின் ஒவ்வொரு புதிய வெளிப்பாடும், அது சரீரப்பிரகாரமான விடுதலை யாகவோ ஆவிக்குறிய எழுப்புதலாகவோ அல்லது அனுதின கிருபையாகவோ எதுவாக இருந்தாலும், அது நன்றியுணர்வுள்ள ஒரு புதிய பாடலாக வெளிப்படுவதற்குத் தகுதியானது. தேவனுடைய 'பரிசுத்த புயம்' இந்த வெற்றியைக் கொண்டுவந்தது என சங்கீதக்காரர் கோடிட்டுக் காட்டுகிறார். மீட்கப்பட்டவர்கள் பாடுகிறார்கள், ஏனென்றால் அவர்களால் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலை இருப்பதை அவர்கள் அறிவார்கள். தேவன் போர்க்களத்தில் தலையிட்டு, வெற்றியை உறுதி செய்தார்.

தேவன் அருளிய இந்த வெற்றி, ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமல்ல. 'பூமியின் எல்லைகள் எங்கும்' இந்த வல்லமை நிறைந்த வெற்றிக்குச் சாட்சிகள் உண்டு என குறிப்பிடுகிறார்.

**இங்கு வெற்றி அல்லது விடுதலை என்பதை குறிப்பிடுவதற்கு சங்கீதக்காரர் 'இரட்சிப்பு' என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்**. ஒரு முறை மாத்திரமல்லாமல், மூன்று முறை 'இரட்சிப்பு' (SALVATION) என்ற பதத்தை உபயோகிப்பது, உலகப்பிரகாரமான மற்றும் சரீரப்பிரகாரமான விடுதலையோடு கடவுள் தரும் ஆவிக்குறிய விடுதலையையும் குறிப்பதாக உள்ளது.

**2. ஓர் மகிழ்ச்சியான சமுதாயத்தின் ஆரவாரம்: (வச.4-6)**
“பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைநோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்; முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணி, கீதசத்தத்தால் அவரை மகிமைப்படுத்துங்கள்.”

இங்கு சங்கீதக்காரர் சொல்லும் துதியானது, அமைதியாகவோ அல்லது தாழ்ந்த சத்தத்துடனோ அல்லது தயக்கத்துடனோ அல்லாமல், அது ஆராவாரம் நிறைந்ததும், உரத்த சத்தமுள்ளதும், செயலூக்கமுள்ளதும், எல்லா மக்களையும் உள்ளடக்கியதாகவும் அமைந்திருக்கிறது.

இங்கு, ‘கீர்த்தனம்பண்ணுங்கள்’ ‘ஆர்ப்பரியுங்கள்’ என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேய வார்த்தையானது, வெற்றி பெற்ற அரசனுக்காக ஒரு விளையாட்டு அரங்கம் ஆரவாரம் செய்வதைப் போன்ற, வெற்றிக் கொண்டாட்ட முழக்கத்தைக் குறிப்பதாக இருக்கிறது. யாழ், கொம்பு, எக்காளம் போன்ற இசைக்கருவிகள் எழுப்பும் இன்னிசையும், பாடகர்குழுவிரின் பாடலில் தொனிக்கும் பன்முக குரல்களும் அரசராகிய ஆண்டவருக்கு அவர்கள் எழுப்பும் ஆரவாரங் களுடன் கலந்து வருமாறு சபை மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது

துதி அல்லது ஆராதனை என்பது தனி நபர்களின் செயல்பாடு அல்ல, அது அனைத்து தரப்பு மக்களும் ஒருமித்த குரலில் பாடும் ஒரு ஏகோபித்த அனுபவம் அல்லது திருச்சபையின் கூட்டு ஆராதனை, என்பது சங்கீதக்காரருடைய வார்த்தைகளின் வெளிப்பாடு ஆகும்.

**3. கடவுள் தரும் வெற்றி, படைப்புகள் அனைத்தின் மகிழ்ச்சி: (வச.7-8)**
“சமுத்திரமும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக. கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டி, பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது.”

படைப்பனைத்தும், இயற்கை முழுமையும் தங்கள் எல்லையைத் தாண்டி தேவாலய பாடகர் குழுவில் சேருவதாக சங்கீதக்காரர் இங்கு குறிப்பிடுகிறார். ஆர்ப்பரிக்கும் கடல், கைதட்டும் ஆறுகள், பாடும் மலைகள், நடனமாடும் குன்றுகள், ஆரவாரம் செய்யும் பூமியின் குடிகள், புகழ்ந்துபோற்றும் தேவாலய பாடகர் குழு, இன்னிசை எழுப்பும் கீத-வாத்தியங்கள் என, அண்ட சராசரத்திலுள்ள அனைத்து படைப்புகளும் படைப்பாளரின் பிரசன்னத்தில் மகிழ்ந்திருப்பதாகச் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

கடவுளின் வாக்களிக்கப்பட்ட புதுப்பித்தலிலும் சமத்துவமான ஆட்சியிலும் தனது இறுதி நம்பிக்கையை வைத்து, நீதிக்காக ஏங்கித்தவித்த இந்த படைப்புகள், இன்று தேவன் அருளிய இரட்சிப்பில் மகிழ்ந்து களிகூறுவது இங்கு ஒரு வியத்தகு நிகழ்ச்சியாகும்.

**4. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு: (வச.9)**
“அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.”

இந்த சங்கீதத்தின் உச்சக்கட்டம், தேவன் உலகத்தை நியாயந்தீர்க்க வருவதை மையமாகக் கொண்டுள்ளது. நியாயத்தீர்ப்பு என்பது ஒரு பயங்கரமான நிகழ்வாக இருக்கக்கூடும் என்றாலும், மீட்கப்பட்டவர்களுக்கு அது ஆழ்ந்த மகிழ்ச்சிக்கான ஒரு காரணமாகும். தேவன் உலகத்தை நீதியுடனும் நியாயத்துடனும், மக்களை நேர்மையுடனும் சமத்துவத்துடனும் நியாயந்தீர்ப்பார்.

அவர் ஒவ்வொரு தீமையையும், அநீதியையும் களைந்து, ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கி, தமது பரிபூரணம் நிறைந்த அரசை நிலைநாட்டுவார்.

இரட்சிப்பின் மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்ளுதல்: நீக்க முடியாத நித்திய மகிழ்ச்சியை ஏற்றுக் கொண்டு கொண்டாடுவது விசுவாசிகள் வாழ்வில் இன்றியமையாததாகும். மீட்கப்பட்டவர்கள், தங்கள் பரிபூரணத்தில் மாத்திரம் பாடுவதில்லை; தேவன் பரிபூரணமாக இருப்பதால் அவர்கள் பாடுகிறார்கள்.

இரட்சிப்பின் அனுபவம் தரும் மகிழ்ச்சியை ஏற்றுக்கொண்டு, நீதி நிறைந்த வாழ்வு வாழ பயிற்சி எடுப்போம். “நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு” என்ற வேத வசனத்தை நம் வாழ்வில் நிறைவேற்றிக் காட்டுவோம். மகிழ்ச்சி எனும் உறுதியான அடித் தளத்தைக் கட்டுவதற்கு, வேத வசனங்களை தியானிப்பதை ஒரு பழக்கமாக ஆக்கிக்கொள்வோம்;.

இந்த கிருபையின் காலத்தில், நம் துதிகளை ஆண்டவருக்குச் செலுத்துவோம். நம்முடைய துதி-ஆராதனை தேவனுக்குச் செலுத்தப்படும் ஒரு அழகான, கனம் தரும் காணிக்கை என்பதை நினைவில் கொள்ளுவோம். இரட்சிப்பின் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொண்டவர்களாய் மாத்திர மின்றி, இரட்சிப்பின் மகிழ்சியை பிரதிபலிக்கிறவர்களாகவும் வாழ நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர்தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

==========================================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# ‘நல்ல விதைகள்’ சுவிசேஷ கைப்பிரதிகள்

‘GOOD SEEDS’ GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி (ONE BATCH) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். BATCH SPONSORSHIP செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.==========================================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-110 ஜூலை 2026 எப்பிசோடு-110

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**முன்னுரை:** இது தாவீதின் சந்ததியில் பிறக்கவிருந்த மேசியாவாகிய இயேசுவைக்குறித்த தீர்க்கதரிசன சங்கீதங்களில் (MESSIANIC PSALMS) ஒன்றாகும். இயேசு, பேதுரு, பவுல் மற்றும் எபிரெயர் நிருபத்தின் ஆசிரியர் ஆகியோர் இதை கிறிஸ்துவின் நிறைவேறுதலாக கூறுகின்றனர். இச்சங்கீதம் கிறிஸ்துவை அரசர் (KING), நித்திய குரு (PRIEST), நீதியுள்ள நீதிபதி (JUDGE) என வெளிப்படுத்துகிறது. எனவே, இது கிறிஸ்துவின் ஆட்சி, மற்றும் மகிமையான வருகையை வெளிப்படுத்தும் ஒரு அற்புதமான சங்கீதமாகும்.

1. **மேன்மைப்படுத்தப்பட்ட அரசர்: (வச.1)** யெகோவா, என் ஆண்டவரிடம் சொன்னது: "நான் உமது பகைவரை உமது கால்களுக்குப் பாதபடி ஆக்கும் வரை நீர் என் வலதுபக்கத்தில் அமர்ந்திரும்." (வச.1 TCV) என்ற வசனத்தில், இரண்டு நபர்கள் குறிப்பிடப்படுகின்றனர். முதலவர் 'யெகோவா' (YHWH), அதாவது பிதாவாகிய தேவன். இரண்டாமவர், 'ஆண்டவர்' இது மேசியாவைக் (MESSIAH) குறிக்கிறது. தாவீது அவரை 'என் ஆண்டவர்' என அழைப்பது ஆச்சரியமானது. ஏனெனில், **யூதர்கள் பார்வையில், தாவீதின் குமாரனாக இருக்க வேண்டிய மேசியாவை, தாவீதே 'ஆண்டவர்' என அழைக்கிறார்.** இயேசு இதை மேற்கோள்காட்டி பரிசேயர்களிடம். "தாவீது அவரை ஆண்டவர் என அழைக்கும்போது, அவர் அவனுக்கு எப்படி மகனாக இருக்க முடியும்?" (மத்.22:45 TCV) எனக் கேட்டார்; அதற்கு பரிசேயர்களால் பதிலளிக்க இயலவில்லை. ஆக, மேசியா தாவீதின் சந்ததியில் பிறந்தாலும், தமது தெய்வீக இயல்பில் தாவீதின் ஆண்டவராக இருக்கிறார். அரசரின் வலதுபுறத்தில் அமர்வது மரியாதை, அதிகாரம், மற்றும் மகிமையின் அடையாளம் ஆகும். இயேசு, சிலுவையில் மீட்புப்பணியை நிறைவேற்றி, உயிர்த்தெழுந்து பரலோகம் சென்று, பிதாவின் வலதுபக்கத்தில் அமர்ந்தது (எபி.10:12,மாற்.16:19) இத்தீர்க்கத்தரிசனத்தின் நிறைவாகும்.
மேசியா குறித்து வச.3 கூறுவது: "நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில் வைகறை கருவுயிர்த்த பனியைப்போல உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்" (வச.3 TCV). இயேசு, தம்மைப் பின்பற்றும்படி மக்களை வற்புறுத்தவில்லை; மாறாக, பரிசுத்த ஆவியானவர் இருதயத்தை மாற்றி, அவர்கள் மனமுவந்து கிறிஸ்துவுக்காக வாழும்படி செய்கிறார். இதனை ஜான் வெஸ்லி, "தேவகிருபை மனிதனின் இருதயத்தை மாற்றுகிறது; அதன் விளைவாக அவன் மகிழ்ச்சியோடும் சுதந்திரத்தோடும் தேவனைச் சேவிக்கிறான்." எனக் கூறுகிறார்.

2. **நித்திய ஆசாரியராகிய மேசியா: (வச.4)** "மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்; அவர் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார்." இங்கு, மேசியா அரசர் மற்றும் குருவாக வெளிப்படுத்தப்படுகிறார். மனிதர்கள் மாறலாம்; அரசுகள் மாறலாம்; தலைவர்கள் மாறலாம்; ஆனால் இறைத்தீர்மானம் ஒருபோதும் மாறாது. எனவே, கிறிஸ்துவின் குருத்துவம் நிரந்தரமானதும் மாறாததுமாகும்.

பழைய ஏற்பாட்டு லேவிய ஆசாரியத்துவத்தில் பின்வரும் வரம்புகள் இருந்தன.

(அ) ஆசாரியரும் பாவிகளே; எனவே, மற்றவர்களுக்காக பலி செலுத்தும் முன் தங்களுடைய பாவங்களுக்காக பலி செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) ஆசாரியர் செலுத்திய பலிகள் தற்காலிகமானவை. எருதுகள் மற்றும் ஆடுகளின் இரத்தம் பாவத்தை முற்றிலும் நீக்க முடியவில்லை.

(இ) ஆசாரியர் மரித்தனர் ஆகவே, ஒரு பூரண ஆசாரியர் தேவைப்பட்டார்.

மெல்கிசேதேக்கு: அவர், சாலேமின் ராஜா, உன்னதமான இறைவனுடைய ஆசாரியன், ஆபிரகாம் போரில் வெற்றி பெற்று திரும்பியபோது, மெல்கிசேதேக்கு அவரை ஆசீர்வதித்தார். ஆபிரகாம் அவருக்கு தசமபாகம் கொடுத்தார். அவருடைய வம்சாவளி குறிப்பிடப் படவில்லை. அவருடைய பிறப்பு-மரணம் பதிவு செய்யப்படவில்லை. ஆகவே, அவர் நித்திய ஆசாரியத்துவத்திற்கு ஒரு முன்மாதிரியாக (TYPE) நிற்கிறார் (ஆதி.14:18-20).

இயேசுவினுடைய ஆசாரியத்துவத்தின் மேன்மைகள்: இயேசு லேவி கோத்திரத்தவர் அல்லர்; யூதா கோத்திரத்தவர். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி அவர் ஆசாரியர் ஆகமுடியாது. ஆனால் கடவுள் அவரை உயர்ந்த ஆசாரிய வரிசையான மெல்கிசேதேக்கின் வரிசையில் நியமித்தார். இயேசு, தம்மையே பலியாக கொடுத்தார் (எபி.9:14). இயேசுவின் பலி, ஒருமுறை போதுமானது (எபி.10:14). இயேசு, எப்போதும் உயிரோடிருக்கிறார் (எபி.7:24), இயேசு எப்போதும் நமக்காக பரிந்துபேசுகிறார் (எபி.7:25, 1யோவா.2:1)

3. **நியாயாதிபதியான மேசியா: (வச.5,6,7)** இப்பகுதி மேசியாவின் 2ம் வருகை, அவரது ஆட்சி, மற்றும் உலகத்தின்மீதான அவரது இறுதி நியாயத்தீர்ப்பை விவரிக்கிறது. “என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்; தம் சினத்தின் நாளில் மன்னர்களை நொறுக்குவார்.” (வச.5 TCV). முதல் வருகையில் அவர் தாழ்மையின் ஊழியராக வந்தார்; பாவிகளுக்காக தம்மை ஒப்புக்கொடுத்தார்; ஆனால், 2ம் வருகையில் அவர் ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தராக வருவார். அவருடைய அதிகாரத்திற்கு எதிராக நிற்கும் எந்த ஆட்சியும்;, எந்த வல்லமையும் நிலைத்திராது. “வேற்று நாடுகளுக்கு அவர் தீர்ப்பளித்து அவற்றைப் பிணத்தால் நிரப்புவார்; பாருலகெங்கும் தலைவர்களை அவர் நொறுக்குவார்” (வச.6 TCV) என்பது இறுதி நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. “வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர் பருகுவார்; ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்” (வச.7 TCV) என்பது, போரில் வெற்றிபெற்று முன்னேறும் அரசன், வழியில் ஓடையிலிருந்து தண்ணீர் குடித்து மீண்டும் உற்சாகத்துடன் தனது பயணத்தைத் தொடர்வதை அழகாக உருவகப்படுத்துகிறது. “அவர் தலைநிமிர்ந்து நிற்பார்” என்பது முழுமையான வெற்றியின் அடையாளமாகும்.

**முடிவுரை:** அன்பர்களே! கிறிஸ்து உங்கள் வாழ்வில் அரசராக நீதியுள்ள நியாயாதிபதியாக உள்ளாரா? (பிலி.2:9,10,11). நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் அவரது ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும். ஆண்டவருக்கு அஞ்சி தூயவாழ்வு வாழ விரும்புகிறிர்களா? (2பேது.3:11); ஆண்டவர்தாமே, அவருக்கு பிரியமாய் வாழ நமக்கு அருள்புரிவாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு),
குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.
AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE,
GLOBAL METHODIST CHURCH IN INDIA.

# வேதாகம போட்டி-188 (ஜூன் 2026 போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C. (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெலட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அன்னாள் ஜெபக்கனி (கோய)
10) அனி பாய் ஜாண் (திலி)
11) அரோமா சாத்ராக் (திலி)
12) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
13) பெல்சி தங்கராஜ் (சென்)
14) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
15) பியூலா ஜேசுராஜன் (பாண்)
16) பியூலா ஜாண்ஸன் (கோய)
17) பியூலா ராஜசெல்வன் (கோய)
18) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
19) செலினா பென்ஸி வில்சன் Dr. (குவை)
20) செலினா வின்சென்ட் (திலி)
21) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
22) சந்திரலேகா (ஆபி)
23) சார்லட் டேவிட் (சென்)
24) சித்ரா பெஞ்சமின் (திளு)
25) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
26) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
27) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
28) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
29) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
30) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
31) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
32) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
33) டெய்ஸி சாம் (கன்)
34) டேனியல் தாமஸ் (திலி)
35) டேவிட் ஜே.ஆர். (திலி)
36) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
37) தெபோராள் S. (சென்)
38) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
39) தேவகனி எமிலிசன் (சென்)
40) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
41) தேவநேசம் ராஜாசிங் (சென்)
42) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
43) டோராபாய் ஜூலியஸ்(சென்)
44) எபெனேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
45) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
46) எலிசபெத் செல்லத்துரை (சென்)
47) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா (மது)
48) எப்சிபா ஜாண் (ராணி)
49) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
50) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
51) குளோரி ரவீந்திரன் (திலி)
52) ஞானஜோதி பேரின்பம் (விரு)
53) ஞானம் ஜெபராஜ் (திலி)
54) ஞானம் பிலிப் (திபூ)
55) ஞான ரோஸ் G. (திளு)
56) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
57) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
58) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
59) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
60) கிரேஸியா ஜெயபால் (சென்)
61) கிரிசெல்டா செய்லர் (சென்)
62) குணவதி ஜெபமணி (சென்)
63) ஹெலென் ஜான்சிராணி (திலி)
64) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
65) ஹெலென் திலக் (தூத்)
66) ஹெலென் I. (திளு)
67) ஹேமா அஜீத் (சென்)
68) ஹேமா கேப்ரியேல் (பெங்)
69) ஹெப்சி அசரியா (பாண்)
70) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
71) ஹேமலதா வில்சன் (மது)
72) இளவரசி ஜோபிதா சுந்தரராஜன் (கோய)

73) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
74) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
75) ஜமீலா செல்வராஜ் (சென்)
76) ஜமுனா K (சென்)
77) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
78) ஜேன் தர்மராஜ் (திலி)
79) ஜான்ஸி சந்தியா (திலி)
80) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
81) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
82) ஜெப கோல்டா (திலி)
83) ஜெபா ஜெயராஜ் (சென்)
84) ஜெபா ஜோன்ஸ் (கோய)
85) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
86) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
87) ஜெபசீலி கிளின்டன் (சென்)
88) ஜெபா சீனி (திலி)
89) ஜெமி ஜாய் பிளஸ்ஸி (திலி)
90) ஜெனிலா S. (சென்)
91) ஜெரின் ஸ்டீபன் (மும்)
92) ஜெஸி செல்லதுரை (கோய)
93) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
94) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
95) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
96) ஜெயந்திஹேனா கிறிஸ்டோபர் (அரி)
97) ஜெயசீலி மார்டின் (தூத்)
98) ஜோனா ஸ்டீபன் (சென்)
99) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
100) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
101) ஜூலியட் ஜெபா (திலி)
102) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
103) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
104) கலா கிருபாகரன் (திலி)
105) கிருபாவதி எஸ். (சென்)
106) லதா மைகேல்ராஜ் (சென்)
107) லீலா டேவிட் (சென்)
108) லீலா ஜோஸப் (கோய)
109) லில்லி ஜாண்ஸன் (சென்)
110) லிஸி டென்சிங் (திலி)
111) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
112) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
113) மல்லிகா V. (சென்)
114) மரியாள் ஜே.எஸ். (தூத்)
115) மேபா ஞான சுகி (கன்)
116) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
117) மெர்ஸி ஃபுளோரா பாஸ்கர் (வேலூ)
118) மெர்ஸி ஸ்டீபன் (சென்)
119) மெர்லின் தேவராஜ் (சென்)
120) மெர்லின் சாமுவேல் (சென்)
121) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
122) மில்காள் சாம் (சென்)
123) முத்துமாலினி அலீஸ் (கோய)
124) நேச மாலா பீட்டர் (திலி)
125) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
126) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
127) ஓலிவியா லேங்டன் (திசி)
128) பாக்யபாய் ஆரோன் (திலி)
129) பமீலா எட்வின் (கன்)
130) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
131) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
132) பொன்மணி உத்தமசிங் (சென்)
133) பிரேமா ஜானி (தென்)
134) பிரேமா ஸ்டாலின் (சென்)
135) பிரேம்குமாரி ஜெயசிங் (சென்)
136) பிரின்ஸ் தயாநிதி (சென்)
137) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
138) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
139) புனிதா ரவிநாத் (கோய)
140) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
141) ராஜபிரமீளா (திதூ)
142) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
143) ரமோலா அதிசயராஜ் (திலி)
144) ராணி ஃபுளோரா (தென்)
145) ராணி பிரபாகர் (திலி)
146) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
147) ரத்னா டென்னிஸன் (சவு)
148) ரத்னாவதி பாண்டியன் (சென்)
149) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
150) ரோஸி ஸ்டீபன் (சென்)
151) ரூபவதி நோபிள் (திலி)
152) ரூத் ஜாண்ஸன் (திலி)

153) ரூத் நரேஷ் (திலி)
154) சலோமி மனோகர் Dr. (சென்)
155) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
156) சாரா பாலசிங் (மது)
157) சரோஜா செல்வராஜ் (சென்)
158) சரோஜினி எலிசபெத் (சென்)
159) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
160) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
161) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
162) செல்வி அமிர்தராஜ் (திரு)
163) செல்வி S. (சென்) (சென்)
164) செல்வின் S. (தூத்)
165) சாந்தி ஆல்பர்ட் (தென்)
166) சாந்தி ஜெயசீலன் (சென்)
167) சாந்தி ரோஸ் (கோய)
168) ஷர்மீளா செல்வராஜ் Dr. (கட)
1694) ஷீலா இஸ்ரேல் (திசி)
170) ஷெரீன் ஜெபராஜ் (திரு)
171) சவுந்தரம் சாலமோன் (சென்)
172) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
173) ஸ்டெல்லா சூசைய்யா (தூத்)
174) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
175) சுகிர்தா சின்னதுரை (திலி)
176) சுஜாதா சாமுவேல் (சென்)
177) சுந்தரி அன்பழகன் (தென்)
178) சுசீலா தியோடர் (திசி)
179) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
180) தனசீலி ஞானராஜ் (சென்)
181) தெல்மா ஸ்டேன்லி (மது)
182) உமா குளோரி (சென்)
183) உஷா ஜெபராணி SIS.H. (திரு)
184) வசந்தா அன்பன் (திலி)
185) வசந்தா சந்திரசேகர் (கோய)
186) வசந்தா துரைராஜ் (ஓஎப்டி)(திசி)
187) வசந்தா சேகர் (சென்)
188) வசந்தி கருணாகரன் (சென்)
189) வசந்தி வாசன் (சென்)
190) விஜயராணி A. (சென்)
191) விஜி டேனியல் (செங்)
192) விமலா ஜெயக்குமார் (தூத்)
193) வினோலியா பால் (மது)
194) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
195) வைலட் சைரஸ் (திலி)

## வேதாகம போட்டி-188 ஜூன் 2026 போட்டிகள் (சங்கீதங்கள் 61-90, சரியான விடைகள்)

1. பவனி செல்வதைக் கண்டனர், வெற்றி ஊர்வலத்தைப் பார்த்தார்கள், இரட்சிப்பு பக்-2
2. 'துதி' ஆகும். இரட்சிப்பு பக்-19
3. பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்தார் இரட்சிப்பு பக்-4
4. எப்பிராயீம் புத்திரர் சங். 78:9
5. பரிசுத்தவான்களுடைய சங். 89:7
6. தேவசபையில் சங். 82:1
7. சரி சங். 68:15
8. தவறு சங். 63:11
9. தவறு சங். 85:10
10. (ஈ) இச்சகம் சங். 81:15
11. (ஈ) மனுஷன் சங். 78:25
12. (அ) நன்மையை சங். 84:11
13. ஆயுசு நாட்கள் சங். 90:10
14. கிருபை, சத்தியம், நீதி, சமாதானம் சங். 85:10,11
15. சிசெரா, யாபீன் சங். 83:9,10

# ‘அனைவரும் ஊழியத்தில்’

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியப் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

2.**நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

3. **நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூலை 2026

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**

நாள்: 10-07-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**

நாள்: 17-07-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**

நாள்: 24-07-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி “தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க” ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================

# வேதாகம போட்டி-189 (ஜூலை 2026 போட்டிகள்)

**சங்கீதம் புத்தகம் - சங்கீதங்கள் 91 முதல் 120 வரை**

**1-3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 4,5,6,7,8,19)**

4-12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

வேதவசன இருப்பிடம் - இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும்.

**பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-07-2026**

1. 'வெற்றி' அல்லது 'விடுதலை' என்பதை குறிப்பிடுவதற்கு, சங்கீதம்-98ல் சங்கீதக்காரர் பயன்படுத்தும் வார்த்தை எது?
2. சங்கீதம்-110ல் யூதர்கள் பார்வையில், தாவீதின் குமாரனாக இருக்கவேண்டிய மேசியாவை, தாவீது எவ்வாறு அழைக்கிறார்?
3. எவற்றின் மதிப்பை ஒரு போர் வீரன் நன்கு அறிவான் (சங்கீதம்-91)?
4. பூமி பிளந்து யாரை விழுங்கியது? யாருடைய கூட்டத்தை மூடிப்போட்டது?
5. யாருடைய மரணம் கர்த்தருடைய பார்வைக்கு அருமையானது?
6. வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல் என்னவாயிற்று?
7. 'செம்மையானவர்களுக்கு இருளிலே மகிமை உதிக்கும்' - **சரியா தவறா?**
8. 'கர்த்தர் சீயோனைக் கட்டி தமது மகிமையில் வெளிப்படுவார்' - **சரியா தவறா?**
9. 'சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காக உடைத்தார்' - **சரியா தவறா?**
10. கர்த்தரின் பிரசன்னத்தினால் '**இவை**' மெழுகுபோல் உருகிற்று:
அ) இருதயங்கள் ஆ) பனிக்கட்டிகள் இ) பாறைகள் ஈ) பர்வதங்கள்
11. கர்த்தர் '**இங்கு**' தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்:
அ) வானங்களில் ஆ) பரலோகத்தில் இ) பூமியில் ஈ) லீபனோனில்
12. கர்த்தர் '**இங்கு**' பெரியவர்; அவர் எல்லா ஜனங்கள்மேலும் உயர்ந்தவர்:
அ) வானங்களில் ஆ) உன்னதங்களில்; இ) யூதாவில் ஈ) சீயோனில்
13. மலைகள் மீது நின்றது, மலைத்து விலகிச் சென்றது!
இடிமுழக்க சத்தத்தில், இறங்கி ஏறி விரைந்தது!
ஏறி இறங்கிச் சென்றபின், எல்லைக்குள்ளே நின்றது! **இது என்ன?**
14. உணவைத்தேடி வழியில் உறுமும்! உன்னதர் தயவில் உணவைத்தேடும்!
உதயசூரியன் ஒளியில் ஒதுங்கும்! உள்ளே-சென்று குகையில் தூங்கும்!
**இவை எவை? இது என்ன?**
15. இளைஞன் விலங்கில் ஒடுங்கினான்! இரும்புச் சிறையில் அடங்கினான்!
இரண்டு காலில் விலங்கிட! இறைவன் வாக்கு விளங்கிட!
எரிந்து சுத்தமாயினான்! எகிப்தில் அதிபராயினான்!
**இவன் யார்? இவன் யார்?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

==========

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

ஆசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்



பாகம்-86 ஜூலை 2026 எப்பிசோடு-86

# ஸ்தோத்தரிக்கப்பட்டவர்

**BLESSED IS THE LORD**

Baruch Adonai

**பாருக் அதோனாய்**

கர்த்தாவே நீர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். சங்.119:12

Blessed are Thou, O! Lord Psalm 119:12

துதியும், மகிமையம், ஞானமும், ஸ்தோத்திரமும், கனமும், வல்லமையும், பெலனும் சதா காலங்களிலும் உடையவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசி களுக்கு ஜூலை மாதத்துக்கான கனத்தின் வாழ்த்துக்கள்.

**2கொரி.**9:15 தேவன் அருளிய சொலலிமுடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம்.

**ஏன் ஸ்தோத்தரிக்க வேண்டும்?**

**சங்.**50:22,14,17 ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். கர்த்தர் செய்கிற சகல நன்மைகளையும் நினைத்துப்பார்த்து ஸ்தோத்தரிக்கும் போது நம் வழிகள் செவ்வைப்படுகின்றன. தேவனுடைய இரட்சிப்பான சகல ஆசீர்வாதங்களும் வெளிப்படுகின்றன. ஆபத்து நேரங்களில் விடுதலை வருகிறது.

**மாற்.**11:9 முன் நடப்பாரும், பின் நடப்பாரும் ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவா என ஆர்ப்பரித்தனர். திருச்சபையில், நாமும் கர்த்தரின் பாதத்தில் அமர்ந்து அவரை மேன்மைப்படுத்துப்போது, பூமியில் அவருடைய ராஜ்யமாய் நாம் மாறி, பூமிக்கு உப்பாக நாம் ஆசீர்வதிக்கப் படுகிறோம். அல்லேலூயா!

**ஜெபம்:** இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. காத்தைப்போல், எங்களுக்கும் விஸ்தாரமான இடத்தைக் கொடுக்கிற கர்த்தராகிய நீர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். யூத ராஜ சிங்கத்தின் பெலனால் நிரம்பி, சத்துருக்களின் புயங்களையும் பிசாசின் சதித்திட்டங்களையும் பீறிப்போடுவார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவுமானவர் பொய் சொல்லுகிறதில்லை என்பதை நம் வாழ்வின் மூலம் வெளிப்படுத்துவார். இயேசுவின் நாமத்தில், பிதாவே. ஆமென், அல்லேலூயா.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

==================================================================================



**தேன்-துளி வேத வசனக் கதைகள்**
(கதை-182 ஜூலை 2026)
ஆசிரியர்: சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

# குற்றம் குறை காணாதே! கூனிக் குறுகி நிற்காதே!

பெங்களூர் நகரில் HARRY என்னும் ஒரு போதகர் சபை நடத்தி வந்தார். அவர் வேத சத்தியத்தை உள்ளபடி போதித்தபடியால் திரளான மக்கள் அவரது சபைக்கு வந்தனர். HARRY இயேசுவின் அன்பை அறிவித்ததோடு, எந்நிலையிலும் சபையார் உண்மையை கடைபிடிக்கவேண்டும் என ஆணித்தரமாக போதித்து வந்தார். குறிப்பிட்ட ஞாயிறு ஆராதனையில் உண்மையை கடைபிடிப்பது குறித்து எச்சரிப்பின் செய்தி கொடுத்தார். அவரது சபையில், மற்றவர்களை குறைகூறி இன்பங்காணும் இருவர், HARRYயின் செய்திகேட்டு வெறுப்புற்று, போதகரிடம் எப்படியாவது குறை கண்டுபிடிக்கவேண்டும் என திட்டம் தீட்டினர்.

ஒரு நாள் அவ்விருவரில் ஒரு நபர், போதகர் வீட்டிற்கு சென்று, “போதகர் ஐயாவை பார்க்கவேண்டும்” என கூற, போதகரின் மனைவி, “ஐயா வெளியே சென்றுள்ளார், மாலையில் வந்துவிடுவார்” என கூறுகிறார். இதைக் கேட்ட அந்த நபர், போதகரின் செருப்பை வாசலில் பார்த்துவிடவே, “போதகர் வீட்டில்தான் இருக்கிறார்; அவரது மனைவி பொய் சொல்கிறார்” என எண்ணிக் கொண்டு, அடுத்த நபரிடம், “நீங்கள் போதகரை பார்த்து வாருங்கள்” எனச் சொல்லி அனுப்பிவைக்கிறார். இரண்டாம் நபருக்கும், “ஐயா வெளியே சென்றுள்ளார்” என செய்தி கிடைக்க, அவரும் போதகரின் செருப்பை வாசலில் பார்த்து, “போதகர் வீட்டுக்குள்தான் இருக்கிறார்” என முடிவு செய்கிறார்.

பின்னர் இருவரும், “போதகரை கையும்-களவுமாக பிடிக்கவேண்டும்” என திட்டமிட்டு தெருவில் காத்திருக்க, போதகர் HARRY காலில் காயத்துடன் வெளியில் இருந்து வீட்டுக்கு வெறுங்காலில் நடந்துசெல்கிறார். இதைக்கண்டு, அந்த இருவரும் வெட்கித் தலைகுனிகின்றனர். தவறை உணர்ந்து போதகரிடம் மன்னிப்பு கேட்டு தங்கள் தீயபழக்கத்தை விட்டு மனந்திருந்தி வாழலாயினர்.

பிரியமானவர்களே! நம் வாழ்விலும் நாம் நமது குற்றங்களை உணர்வதோடு, பிறர்-குறை காண்பதை விட்டுவிட வேண்டும். பிறரை குறைகூறும்போது, நாம் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து, மனந்திரும்பி மேலான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வோம். வேதம் இவ்விதமாய்ச் சொல்லுகிறது:

மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். மத்-7:1.
நமது இருதயமே நம்மைக் குற்றவாளியாக தீர்க்கும். 1யோவா-3:20
உன் சகோதரனை குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? ரோம-14:10
மற்றவர்களைக் குற்றவாளியாக தீர்க்கிறவனே, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை. ரோமர்-2:17.

---

**M.AZARIAH GNANADOSS M.A, M.ED**
**EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900**

===

இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-10 பகுதி-01 எப்பிசோடு-48 ஜூலை 2026

கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**10. மீண்டும் தாமஸ் கிறிஸ்தவர்கள்:**

**1. பிரான்சிஸ் ராஸ் - முட்களின் கிரீடம் சபை:**

பிரான்சிஸ்கோ ரோஸ், கி.பி.1559ம் ஆண்டு கட்டலோனியா விலுள்ள ஜிரோனாவில் பிறந்தார். கி.பி.1584ம் ஆண்டு இந்தியா விற்கு வந்து வைப்பிகோட்டாவில் உள்ள செமிடிக் மொழிகளின் பேராசிரியரானார். அவர் சிரியாக் மற்றும் மலையாளம் இரண்டையும் கற்க சிரமப்பட்டார். அலிக்சோ டி மெனெசஸா, ஆரம்பகால நவீன மலபாரில் உள்ள புனித தாமஸ் கிறிஸ்தவர் களுடன் தொடர்புடையவரும் அங்கமாலி-கிரங்கனூரின் மார் ஆபிரகாமுக்குப் பிறகு முதல் பேராயராகப் பணியாற்றிபின்னர்; கி.பி.1601ம் ஆண்டு அங்கமாலியின் பிஷப்பாகப் புனிதப்படுத்தப் பட்டவருமான ஒரு காடலான் ஜேசுயிட் ஆவார். கொச்சின் பிஷப் மற்றும் டி மெனெசஸா இடையிலான அதிகார வரம்பு தகராறுகளைத் தீர்ப்பதில் பிரன்சிஸ்கோ ரோஸ் பங்காற்றினார்.

சீரோ-மலபார் திருச்சபையின் கிழக்கு கத்தோலிக்க பிஷப்கள், மார்தோமா சிலுவையை கையில் வைத்திருப்பர்; இது இந்திய செயிண்ட் தாமஸ் கிறிஸ்தவர்களின் சிரிய திருச்சபைப் பாரம்பரியத்தையும் அடையாளத்தையும் குறிக்கும். பிஷப் ரோஸ், சிரோ-மலபார் கத்தோலிக்க திருச்சபையில் ஒரு முக்கிய நபராக, டி நோபிலியின் அணுகுமுறை திறனுடையதென உணர்ந்தார். மேலும் அவருக்கு தம் ஆதரவையும் வழங்கினார். கி.பி.1615ம் ஆண்டில் ஜேசுவைட் ஜெனரல் கிளாடியோ அக்வாவிவாவுக்கு தனது முறைகள் குறித்த அறிக்கையை அனுப்ப டி நோபிலியை பிஷப் ரோஸ் அனுமதித்தார், நோபிலி பிற மிஷனரிகளிடம் எதிர்கொண்ட விமர்சனங்களையும் எதிர்ப்பையும் சமாளிப்பதில் பிஷப் ரோஸின் ஆதரவு மிக முக்கியமானது. மதுரை மிஷனை நிறுவுவதிலும், மிஷனரிப் பணியில் கலாச்சார தழுவலின் செயல்திறனை நிரூபிப்பதிலும் டி நோபிலி மற்றும் பிஷப் ரோஸ் இடையிலான ஒத்துழைப்பு முக்கியமானது. கி.பி.1624ல் பிஷப் பிரான்சிஸ் ரோஸ் இறந்தபின், பிஷப் ஸ்டீபன் டி பிரிட்டோ பதவியேற்றார்.

**முட்களின் கிரீடம்:**

இது இயேசுவின் தலையில் வைக்கப்பட்ட உண்மையான கிரீடம் என நம்பப்படும் ஒரு நினைவுச்சின்னம் ஆகும். 13ம் நூற்றாண்டில் மன்னர் லூயிஸ்-IX, முள்களின் கிரீடத்தை கி.பி.1239ம் ஆண்டு கையகப்படுத்தி பின்னர் அதை வைப்பதற்காக பாரிஸில் செயிண்ட்-சேப்பலை கட்டினார். 15மீட்டர் உயரமுள்ள அதன் வண்ணக் கண்ணாடி ஜன்னல்கள் 1100-க்கும் மேற்பட்ட

விவிலியக் காட்சிகளைச் சித்தரித்ததோடு, சிற்றாலயம் முழுவதையும் துடிப்பான ஒளியால் நிரப்பின. பிரெஞ்சுப் புரட்சியின்போது, 'முட்களின் கிரீடம்' பிரெஞ்சு தேசிய நூலகத்திற்கு மாற்றப்பட்டது. பின்னர் இது கி.பி.1804ம் ஆண்டில் நோட்ரே-டேமுக்கு மாற்றப்பட்டு பல நூற்றாண்டுகளாக நோட்ரே-டேம் கதீட்ரலில் வைக்கப்பட்டிருக்கிறது. 'முட்களின் கிரீடம்' இயேசுவின் துன்பம், தியாகம் அவமானம் தெய்வீக அதிகாரம் மற்றும் அரசாட்சியை குறிக்கிறது. இது, மாதத்தின்; முதல் வெள்ளி மற்றும் லெந்து காலத்தில் பொதுமக்களின் வணக்கத்திற்காக காட்சிப்படுத்தப்படுகிறது. இதனை உருவாக்க 'ஜிஸிபஸ் ஸ்பைனா கிறிஸ்டி' என்ற தாவரம் பயன் படுத்தப்பட்டதாகவும், அதன் மறுபெயர் 'ஜுஜுப்-மரம்' என்றும் தெரிகிறது. 'முட்களின் கிரீடம்' புனித பொருளாக போற்றப்படுகிறது,

**சபை - பேராயர் மற்றும் தலைமை குருக்கள்:**

வரலாற்று ரீதியாக, பேராயர் பதவி, பிஷப்பிற்கு உதவிய டீக்கன்களின் தலைவரிடமிருந்து உருவானது. பேராயர், பிஷப் இருவரும் குறிப்பிடத்தக்க பதவிகளை வகித்தாலும், ஒட்டுமொத்த திருச்சபைப் படிநிலையில் பேராயர்கள் பிஷப்பை விட கீழ்நிலையில் தரவரிசைப்படுத்தப் பட்டனர். ஒரு குறிப்பிட்ட பிஷப் தடைசெய்யாத வரையில், எந்தவொரு பிஷப்பும் கத்தோலிக்க திருச்சபை முழுவதும் பிரசங்கம் செய்யலாம். மேலும் எந்தவொரு பாதிரியாரும் அல்லது டீக்கனும் எங்கும் பிரசங்கம் செய்யலாம். தேவாலய கட்டிடங்கள், மதகுருமார் நலன் மற்றும் பணி, ஊழியத்தின் வளர்ச்சி போன்ற தேவாலய அம்சங்களை மேற்பார்வையிட, பேராயருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பேராயர்கள் மதகுருமார்களுக்கும் மற்றும் சாதாரண தலைவர் களுக்கும் ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறார்கள்.

ஆங்கிலிகன் திருச்சபையில், ஒரு ஆர்ச்டீக்கன் என்பவர் ஒரு பிஷப்பிற்குக் கீழே உள்ள ஒரு மூத்த ஆங்கிலிகன் பாதிரியார் ஆவார். பேராயர்கள் பெரும் பாலும் 'வணக்கத்திற்குரியவர்கள்' என்று கருதப்படுகிறார்கள். இங்கிலாந்து திருச்சபையில், புதிய பாதிரியார்களை திருச்சபைகளில் சேர்ப்பதில், குறிப்பிட்ட பகுதியில் பிஷப்பின் பிரதிநிதி மற்றும் ஆலோசகராக பேராயர்கள் முக்கிய பங்கு வகித்தனர். ஒரு பிஷப் பெரிய புவியியல் பகுதிகளை மேற்பார்வையிடுவதோடு திருச்சபை கட்டமைப்பிற்குள் அதிக அதிகாரத்தைக் உடையவராய் இருந்தார்; அதே நேரத்தில் பேராயர்கள் ஒரு சிறிய, வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் நடைமுறை நிர்வாகத்தில்தான் கவனம் செலுத்தினர். குறிப்பாக இங்கிலாந்து திருச்சபையில் உள்ள பேராயர்கள் பெரும்பாலும் அரசியல் விஷயங்களில் ஈடுபட்டிருந்தனர், அதே நேரத்தில், பேராயர்கள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட திருச்சபையின் உள் செயல்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்தினர்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

---

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD),
(POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==========================================================================================

# DETAILS ABOUT US

**OUR CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com

**OUR BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**OUR UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

UPI ID: sjddharmaraja@okhdfcbank

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

**OUR QR CODE**

Rev. Dharmaraja S.J.D

UPI ID: sjddharmaraja@okhdfcbank

Scan to pay with any UPI app

==========================================================================

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES

(GOOD SEEDS TRACTS - நல்ல விதைகள் கைப்பிரதிகள்)

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 22 வகையான நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை, கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதியின் ஒரு தொகுதியை (BATCH SPONSORSHIP) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சென்னை-93. தென்னிந்தியா.

==========================================================================
==========================================================================

# வசன தியானம்



ஆசிரியர்: Rev. S.J.D. தர்மராஜா,
ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள்,

தியானம்-171 ஜூலை 2026

## சக்திமிக்க தேவ பாதுகாப்பு

சங்கீதம்-91

### ராணுவ வீரர்களின் பாடல்

உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

சங்.91:7

**சங்கீதம்-91**, 'ராணுவ வீரர்களின் சங்கீதம்' என்றழைக்கப்படுகிறது. இது, தெய்வீக பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு பாடலாகும். இதன் வாக்குறுதி களை, வரலாற்றில், படைவீரர்கள், மதகுருமார்கள் மற்றும் விசுவாச கூட்டத்தார் ஆபத்திற்கு எதிரான ஒரு கேடயமாகப் பயன்படுத்தியுள்ளனர். தேவபிரசன்னத்தில், நமக்கு அசைக்கமுடியாத அடைக்கலம் உண்டு என்பதற்கு இது, காலத்தால் அழியாத ஒரு நினைவூட்டலாக அமைந்துள்ளது.

**வசனம்:** "நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்" (வச.2) என்பது படைவீரனின் விசுவாசமாகவும், "உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது" (வச.7) என்பது வீரனின் பாதுகாப்புக்கான கடவுளின் வாக்குறுதியாகவும் இங்கு காணப்படுகிறது.

**சிந்தனை:** போர்வீரர்கள் இளைப்பாறி, தங்களைத் தேற்றிக்கொண்டு, பகைவரை எதிர்த்து உறுதியாய் செயல்பட புகலிடம் அவசியம். **ஆகவே, 'அடைக்கலம்' 'கோட்டை' ஆகியவற்றின் மதிப்பை ஒரு போர் வீரன் நன்கு அறிவான்.** ஆவிக்குறிய வாழ்வில், கடவுளை நம் புகலிடமாகக் கொள்ளுமாறு இச்சங்கீதம் நம்மை ஏவுகிறது. நெருக்கடி, கவலை, சந்தேகம், பயம் போன்ற ஆவிக்குறிய போராட்டங்களில், நமது பலம், நமது பணம், நமது அந்தஸ்து போன்றவற்றுக்குள் தஞ்சம் அடைவது மிக எளிது; ஆனால், சங்கீதக்காரரோ, இங்கு அசைக்கமுடியாத ஒரு கோட்டையை நமக்கு காட்டுகிறார். நாம் கடவுளின் அடைக்கலத்தில் தங்கும்போது, வாழ்வின் பிரச்சனைகள், நம் இருதயத்தின் மீதான தம் பிடியை இழக்கின்றன. ஆகவே, நாம் நமது சொந்தக் கவசங்களால் மட்டுமல்ல, சர்வவல்ல தேவனின் இறக்கைகளாலும் மூடப்படுகிறோம்.

**பரிசோதனை:** நம் போராட்டங்கள் எத்தனை பெரிதாயிருந்தாலும், ஒரு கணம் நிதானித்து, தேவனை நமது கேடயமாக்கி, அவரை நம் அரண் ஆக்கி அவர் தரும் பாதுகாப்பை எதிர்நோக்கிக் காத்திருப்போம்.

**ஜெபம்:** ஆண்டவரே! வாழ்வின் போராட்டங்களில் உமது நிழலில் தங்க விரும்புகிறேன். என் ஆபத்து நேரத்தில் நீர் என் அடைக்கலமாய் இருந்து, என்னைப் பாதுகாக்கிறீர் என்று நம்பி, விசுவாசத்தில் உறுதியாக நிற்க எனக்கு உதவிசெய்யும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==================================================================

# செய்தித்துளிகள் ஜூலை 2026

1. இங்கிலாந்து பிரதமர் ராஜினாமா. உள்ளாட்சி தேர்தல் தோல்வி, நாட்டின் பணவீக்கம், சட்டம்-ஒழுங்கு பிரச்சினை, சொந்த கட்சியில் (தொழிலாளர் கட்சி) எதிர்ப்பு காரணமாக பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார், கீர் ஸ்டார்மர்.

2. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்ரிக்கா உள்ளிட்ட 11நாடுகள் பங்கேற்கும் 'பிரிக்ஸ்' எரிசக்தி மாநாடு ஜூன் 25, 26 தேதிகளில், இந்தியாவில் 4வது முறையாக, ஹரியானா மாநிலம் குருகிராமில் நடைபெறுகிறது.

3. தமிழ்நாட்டில், ஜூன் 11ம் தேதி 96,141 ஆசிரியர் பணி யிடங்கள் நிரப்பப்பட்ட நிலையில், 1214 தலைமையாசிரியர் பணியிடங்கள் உட்பட இன்னும் 18,107 ஆசிரியர் பணியிடங் கள் காலியாக உள்ளதாக பள்ளிக் கல்வித்துறை தகவல்.

4. ஹார்முஸ் நீரிணையில் தடை நீங்கியுள்ள நிலையில், மங்களூரில் பூமிக்கு அடியில் குகை போன்ற அமைப்பில் ரூ.15,000 கோடி செலவில் பிரமாண்ட எண்ணெய் சேமிப்பு நிலையம் அமைக்கப்படும் என ஒன்றிய அரசு தகவல்.

5. ஜப்பானில் வரும் செப்-19முதல் அக்-4வரை நடைபெறும் ஆசிய கோப்பை போட்டிகளுக்கான இந்திய பேட்மிண்டன் ஆண், பெண், கலப்பு மற்றும் தனிநபர் பிரிவு வீரர், வீராங்கனைகள் பட்டியலை வெளியிட்டது BAI.

# அப்போஸ்தலனும் இரத்தசாட்சியுமான பரி.யாக்கோபுவின் திருநாள் நினைவலைகள்

பரி.யாக்கோபுவின் திருநாள் ஜூலை 25ம் நாள் ஆசரிக்கப்படுகிறது. பரி.யாக்கோபு, இயேசுவின் 12 சீடர்களில் ஒருவர், அப்போஸ்தலன் பரி.யோவானின் சகோதரன், தொழில் ரீதியாக ஒரு மீனவர். தமது அனல் பறக்கும் செயல்பாட்டுக்காக 'இடிமுழக்க மைந்தர்' என அறியப்பட்டவர். 12 சீடர்களில் முதல் இரத்த சாட்சி இவரே. கி.பி.44ம் ஆண்டில் 1ம் ஏரோது அகிரிப்பா அரசனால் இவர் சிரச்சேதம் செய்யப்பட்டார்.



இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்

